புனிதக் கோட்டை அம்மா; அம்பு இட்டவருக்கு ஆழிப் பேரலை அம்மா; கும்பிட்டவருக்கு குலக் கடவுள் நீங்கள் அம்மா; மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் தொகுதி, வகுரம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

311—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***35017—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தினைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையில் உள்ளதால், தற்போது அதனைப் புதுப்பிக்க அவசியம் எழவில்லை. மேலும், ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தளவாடங்களுடன்கூடிய காத்திருப்போர் அறை, மின் இணைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் செய்ய மாவட்ட முன்நோக்குத் திட்ட நிதியின்கீழ் ரூ.5,40,000 நிதி ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறையினர் மூலமாக தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போது ஆற்காடு

2015 செப்டம்பர் 21]

வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் எனது பணிவான வணக்கங்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழினத்திற்கே இருக்கின்ற ஒரே தாய், நமது அன்புத் தாய், தங்கத் தாரகை, மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால்தான் ஈழத் தமிழரின் ஈர விழிகளைத் துடைத்தார். வலிமையான தீர்மானத்தால், நம்முடைய அம்மாவின் எதிரிகளும் வாயடைத்துப் போய் உள்ளனர். தீர்மானத்தின் வலிமை கண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான எண்ணம் கண்டு, அரசு, மக்களைக் காக்கும் கேடயம், அதிகாரம் என்பது அடக்குமுறை அல்ல, அன்புமுறை. அதிகாரம் என்ற ஜனநாயக தத்துவத்தை உலகிற்கு உணர்த்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் பழைய சீமை ஓடு கட்டடம் ஆகும். இங்கு அடிக்கடி குரங்குகள் வந்து ஓடுகளைப் பிரித்து நாசம் செய்துவிடுகின்றன. ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் 60 ஊராட்சிகளும், மூன்று பேரூராட்சிகளும், ஒரு நகராட்சியும் உள்ளன. இங்கு வாழும் ஏழை, எளிய மக்கள் தினந்தோறும் இந்த அலுவலகத்திற்கு வந்து செல்வார்கள். குரங்குகள் சேட்டையினால், கட்டடத்திலுள்ள சீமை ஓடுகள் அடிக்கடி பாழடைந்து விடுகின்றன. மேலும், இந்தக் கட்டட வளாகத்தில் ஆற்காடு நீதிமன்ற அலுவலகக் கட்டடமும், கருவூல அலுவலகக் கட்டடமும் உள்ளதால், பொது மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, எனது கோரிக்கையை

நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, இடம் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம் 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வட்டாட்சியர் அலுவலகம் இயங்கிவரும் கட்டடம் மிகவும் பழமைவாய்ந்த கட்டடம்தான்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: அதனால்தான் இந்தக் கட்டடத்தினுடைய மேற்கூரை பழமை மாறாமல் கான்கிரீட்டால் போடப்பட்டு, அதன்மேல் மெட்ராஸ் ஓடுகள் வேயப்பட்டுள்ளன. இங்கு மேலும் தேர்தல் பிரிவு மற்றும் பதிவு வைப்பு அறைக்கு சமீபத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை அதில் இயங்கி வருகின்றன. அதோடு, முன்னோக்குத் திட்டத்தின்கீழ், ரூ.5 இலட்சத்து 40 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தற்போது இந்தக் கட்டடத்தில் ஏற்படும் பழுதுகளைச் சீர்செய்து புதுப்பித்துக்கொள்ள பொதுப் பணித் துறைமூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்கின்றார். இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நான்காண்டு கால ஆட்சியில், இதுவரை இல்லாத வகையிலே 351 கட்டடங்கள் கட்ட ரூ.391 கோடி ரூபாய் அளவில் நிதியை ஒதுக்கி, வரலாற்றுச் சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்திருக்கிறார்கள். ஆகவே, தேவையின் அவசியம் கருதி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய வகையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, காளையார்கோவில் வட்டம் கடந்த ஆண்டு புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. இந்தக் காளையார்கோவில் வட்டத்திற்குப் புதிய தாலுகா அலுவலகம் கட்டுவதற்காக போதுமான இடம் தேர்வு செய்யப்பட்டு, தயார் நிலையில் இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகத்திலே வருவாய்த் துறையினுடைய பங்கு மிக முக்கியம் என்பதன் அடிப்படையில், தேவையின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து, வருவாய்த் துறைக்குத் தேவையான கட்டடங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நான்காண்டுகளில் மட்டும் 68 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்களை 194.14 கோடி ரூபாய் அளவில் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தக் கோரிக்கை புதிய தாலுகா அலுவலகம் கட்டுவது பற்றியதாகும். இதுவரை வரலாற்றில் இல்லாத வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 65 புதிய வட்டங்களை உருவாக்கித்

தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, காளையார்கோவிலுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, புதிய வட்டங்களை உருவாக்குகின்றபோது, முதலிலே establishment என்று சொல்லக்கூடிய பணியாளர் நியமனம் தேவை என்ற அந்த அடிப்படையிலே, அதை நிறைவேற்றி வைத்துவிட்டு, அதற்குப்பிறகு உரிய இடத்தைத் தேர்வு செய்து, அதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, தேவையான நேரத்தில் உரிய கட்டடத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், இதுசம்பந்தமாக நீங்கள் கொடுத்ததை, உங்கள் கட்சி உறுப்பினர்கள் இன்று காலையில்தான் என்னிடத்தில் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடு) இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்று காலையில் கொடுத்ததை, இப்போதே எப்படி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.